# சீர்காழி நகராட்சி



2020 –ம் ஆண்டு மே மாதம் 29.05.2020 வெள்ளி கிழமை காலை 11.00 மணிக்கு சீர்காழி நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கை.

முன்னிலை. திருமதி.P.தமிழ்ச்செல்வி.B.A.,<br>
தனி அலுவலர் (ம) ஆணையர்,<br>
சீர்காழி நகராட்சி.

| | | |
|---|---|---|
| பொருள் எண்-1 | இந்நகராட்சியில் நகரமைப்பு பிரிவில் சீர்காழி மாவட்ட உரிமையியல் நடுவர் நீதி மன்றம் மற்றும் மயிலாடுதுறை சார்பு நீதி மன்றங்களில் ஆக்கிரமிப்புகள் தொடர்பாக வழக்குகள் நிலுவையில் உள்ளன . மேலும் இந்நகராட்சியின் தொடர்புடைய வழக்குகளில் நகராட்சி சார்பில் சீர்காழி நகராட்சி வழக்கறிஞர் திரு .E. செல்வராஜ் அவர்களால் ஆஜராகி வாதிட வேண்டியுள்ளதால் வாதிட்ட வழக்குகளுக்கு கீழ்கண்ட விவரம் படி வழக்கு செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டு விலைப்பட்டியல் வரப்பெற்றுள்ளது. | நகர்மன்ற தீர்மான எண்– 478 நாள்.29.05.2020 அனுமதிக்கப்படுகிறது. |

| வ. எண் | வழக்கு எண் | தொகை |
|---|---|---|
| 1 | OS No -52/2019 | 7250 |
| 2 | OS No -257/2017 | 7250 |
| 3 | OS No -171/2017 | 10000 |
| 4 | OS No -32/2010<br>AS No – 4/2020 | 9750<br>11000 |
| 5 | OS No – 220/2006<br>AS No – 104/2020 | 9750<br>11000 |
| 6 | OS No – 3/2019 | 7250 |
| 7 | OS No – 216/2019 | 7250 |
| 8 | OS No – 103/2018<br>AS No – 54/2019 | 9750<br>11000 |
| 9 | OS No – 238/2011<br>AS No - 140/2018 | 9750<br>11000 |
| 10 | OS No – 223/2015 | 7250 |

<table>
<tr><td></td><td>

| | | |
|---|---|---|
| 11 | OS No – 151/2019 | 7250 |
| | Total | 136500 |

மேற்கண்ட விவரப் படி வழக்கறிஞர் கட்டணமாக தொகை ரூ–136500/– க்கு காசோலை வழங்கவும் மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.<br>(அ–கு) 1.மன்றம் அனுமதிக்கலாம்.<br>2.பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின அனுமதி பெற்று<br>தொகை வழங்கியதை அனுமதிக்கலாம் .<br>(ந.க. எண் : 3862/2019/எச்1)</td><td></td></tr>
<tr><td>பொருள் எண்-2</td><td>சீர்காழி நகராட்சி– கொரோனா வைரஸ் COVID-19 தடுப்பு நடவடிக்கைக்கு கிருமிநாசினிகள் மற்றும் பணியாளர்களுக்கு தேவையான பாதுகாப்பு உபகரணங்கள் விநியோகம் செய்திட நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடித ந.க..எண் 3336/2020–13/J2 . நாள்:09.04.2020–ன்படியும் . அவசர அவசியம் கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு15 ன் கீழ் பணியினை மேற்கொள்ள பணி ஆணைவழங்கி செலவீனம் ரூ 7,10,446 மேற்கொண்டமைக்கு தனி அலுவலர் அவர்களின் பின்னேற்பு வழங்கிட அனுமதி வேண்டப்படுகிறது.<br>(அ–கு1.மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க. எண் : 1034/2020/எச்1)</td><td>நகர்மன்ற தீர்மான எண்– 479 நாள்.29.05.2020 அனுமதிக்கப்படுகிறது.</td></tr>
<tr><td>பொருள் எண்-3</td><td>சீர்காழி நகராட்சி – ஈசானிதெரு கலவை உரத்திடலில் குப்பைகளை வாரி எடுத்து ஒரு சேர குவித்து சமன் செய்து தரும் பணிகள் மேற்கொள்ள விலைப்புள்ளி கோரியதில் 14.11.2019 அன்று கீழ்கண்ட மூன்று விலைப்புள்ளிகள் வந்துள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர்,முகவரி | விலைப்புள்ளி தொகை |
|---|---|---|
| 1 | திரு.R. தன்ராஜ்<br>சாய் எர்த் மூவர்ஸ்<br>தென்பாதி , சீர்காழி | ரூ.845<br>(1 மணி நேரத்திற்கு) |
| 2 | திரு. R. கலைவாணன்<br>காழி கலை எர்த் மூவர்ஸ்<br>பிடாரி வாடக்கு வீதி , சீர்காழி | ரூ.950<br>(1 மணி நேரத்திற்கு) |
| 3 | திரு.A.ரம்யா<br>நீலாட்சி எர்த் மூவர்ஸ்<br>T.B.ரோடு , தென்பாதி , சீர்காழி | ரூ.900<br>(1 மணி நேரத்திற்கு) |

(அ–கு) 1மேற்கண்ட இரண்டு விலைப்புள்ளிகளின் வரிசை எண் 1–இல் குறிப்பிடப்பட்டுள்ள திரு.R. தன்ராஜ் சாய் எர்த் மூவர்ஸ்,தென்பாதி , சீர்காழி. என்ற நிறுவனம்</td><td>நகர்மன்ற தீர்மான எண்– 480 நாள்.29.05.2020 அனுமதிக்கப்படுகிறது.</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| | கொடுத்துள்ள விலைப்புள்ளி குறைவாக உள்ளதால் அதனை ஏற்கலாம்.<br>2.பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி ஆணை வழங்கவும் பணிகள் மேற்கொள்ளவும்,மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>(ந.க. எண் : 4074/2019/எச்1) | |
| பொருள் எண்-4 | சீர்காழி நகராட்சி – கொரோனா COVID-19 வைரஸ் தடுப்பு நடவடிக்கைக்கு பொது மக்கள் மற்று அனைத்து பணியாளர்களுக்கும் பரிசோதனை செய்ய தேவையான தெர்மாமீட்டர் ஸ்கேனர் விநியோக செய்திட நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னைஅவர்களின் கடித ந.க.என :3336/2020/J2.நாள்:9.4.2020–இன் படியும் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்ட 1920 பிரிவு 15–இன் கீழ் பணியினை மேற்கொள்ள பணி ஆணை வழங்கி செலவீனம் ரூ.37,760/ மேற்கொண்டமைக்கு தனி அலுவலர் அவர்களின் பின்னேற்பு வழங்கிட அனுமதி வேண்டப்படுகிறது.<br>(அ–கு1.மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க. எண் : 1282/2020/எச்1) | நகர்மன்ற தீர்மான எண்– 481 நாள்.29.05.2020 அனுமதிக்கப்படுகிறது. |
| பொருள் எண்-5 | சீர்காழி நகராட்சி – கொரோனா COVID-19 வைரஸ் தடுப்பு நடவடிக்கைக்கு அனைத்து பணியாளர்களுக்கும் தேவையான பாதுகாப்பு உபகரணங்கள் கையுறை விநியோகம் செய்திட நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னைஅவர்களின் கடித ந.க.எண்:3336/2020/J2.நாள்:23.4.2020 –இன் படி யும் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15–இன் கீழ் பணியினை மேற்கொள்ள பணி ஆணை வழங்கி செலவீனம் ரூ.94,400/– மேற்கொண்டமைக்கு தனி அலுவலர் அவர்களின் பின்னேற்பு வழங்கிட அனுமதி வேண்டப்படுகிறது.<br>(அ–கு1.மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க. எண் : 1419/2020/எச்1) | நகர்மன்ற தீர்மான எண்– 482 நாள்.29.05.2020 அனுமதிக்கப்படுகிறது. |
| பொருள் எண்-6 | சீர்காழி நகராட்சி – கொரோனா COVID-19 வைரஸ் தடுப்பு மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ள முகஉறை போதுமான கையிருப்பு அவசியம் தேவைப்படுவதால் முகவுறை எண்ணிக்கை 5000 வாங்கி வழங்கிட உத்தேச செலவீனம் ரூ.25,000/–க்கு பொது நிதியிலிருந்து செலவுகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>(அ–கு) 1.மன்றம் அனுமதிக்கலாம்.<br>2.பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் அனுமதி பெற்று தொகை வழங்கியதை அனுமதிக்கலாம் .<br>(ந.க. எண் : 1034/2019/எச்1) | நகர்மன்ற தீர்மான எண்– 483 நாள்.29.05.2020 அனுமதிக்கப்படுகிறது. |
| பொருள் எண்-7 | தமிழ்நாடு அரசு ,நகரட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்கள் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் நாகப்பட்டினம் அவர்களின் உத்தரவின் படி சீர்காழி நகராட்சி COVID-19 தடுப்பு நடவடிக்கை மற்றும் முன்னெச்சரிக்கை பணிகள் மேற்கொள்ளும் நகராட்சி அலுவலர்கள், பணியாளர்கள் , தூய்மை பணியாளர்கள், காவல் துறை, தீயணைப்பு துறை, நியாயவிலை கடை பணியாளர்கள் மற்றும் | நகர்மன்ற தீர்மான எண்– 484 நாள்.29.05.2020 அனுமதிக்கப்படுகிறது. |

நகர பொதுமக்களுக்கு கீழ்கண்டவாறு தடுப்பு நடவடிக்கை பணிகள் மேற்கொள்ளப்பட்டது மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ. (லட்சத்தில்) |
|---|---|---|
| 1 | சீர்காழி நகராட்சியில் COVID-19 வாடகை TATA ACE வானங்களில் தொற்று நோய் கிருமி செயலிழப்பு கருவி (Power Sprayer) மற்றும் வாடகை ஆட்டோக்கள் மூலம் நகர பொது மக்களுக்கு COVID–19 தொடர்கான விழிப்புணர்வு அறிவிப்புகள் செய்யும் பணி. | 7.60 |
| 2 | சீர்காழி நகராட்சியில COVID-19 தடுப்பு நடவடிக்கை பணிகஙக்கு சிந்தெட்டிக் கையுறைகள், காட்டன் கையுறை, துணியால் தைக்கப்பட்ட முககவசம் (MASK) மற்றும் கை சுத்திகரிப்பான் (Hand Sanitizer) விநியோகம் செய்யும் பணி. | 2.00 |
| 3 | சீர்காழி நகராட்சியில் COVID-19 தடுப்பு நடவடிக்கை பணிகஙக்கு Door Sticker, கடை விவரங்கள் மற்றும் பணியாளர்களின் விவரங்கள் அடங்கிய அறிவிப்பு நோட்டிஸ்,Data Collection tool at field level Annexure-II படிவம், பிளக்ஸ் போர்டு மற்றும் மூன்று வண்ணங்களில் அனுமதி அட்டை (Permit Card) ஆகியவை விநியோகம் செய்யும் பணி. | 0.90 |
| 4 | சீர்காழி நகராட்சியில் COVID-19 தடுப்பு நடவடிக்கை பணிகளுக்கு கையுறைகள், துணியால் தைக்கப்பட்ட முககவசம் (MASK) மற்றும் கை சுத்திகரிப்பான் (Hand Sanitizer) ஆகிய பாதுகாப்பு உபகரணங்களை விநியோகம் செய்யும் பணி. | 1.40 |
| 5 | சீர்காழி நகராட்சியில் COVID-19 அம்மா உணவகம் மூலம் உணவு பொட்டலம் (Parcel) வழங்க Aluminum foil container and Paper Cup விநியோகம் செய்யும் பணி. | 1.50 |
| 6 | சீர்காழி நகராட்சியில் COVID-19 வாடகை TATA ACE வானங்களில் தொற்று நோய் கிருமி செயலிழப்பு கருவி (Power Sprayer) பொறுத்தி கிருமி நாசினி தெளிக்கும் பணி. | 1.90 |
| 7 | சீர்காழி நகராட்சியில் COVID-19 முககவசம் (MASK) மற்றும் | 1.22 |

| | | | |
|---|---|---|---|
| | | **Disposable Biohazard PPE Kit** (PPE) ஆகியவை விநியோகம் செய்யும் பணி. | |
| | 8 | சீர்காழி நகராட்சியில் COVID-19 கொரான பாதிப்பு கண்டரியப்படும் பகுதியில் பொது மக்கள் செல்லா வண்ணம் ஆங்காங்கே சாலை பகுதிகளில் தடுப்பு அமைத்தல், காவல் துறைக்கு சாமியானா பந்தல், டேபிள், நாற்காலி மற்றும் மின்விசிறி வசதிகள் அமைத்திடும் பணி. | 2.50 |
| | 9 | சீர்காழி நகராட்சியில் COVID-19 விழிப்புணர்வு பதாதைகள் மற்றும் தற்காலிக தண்ணீர் வசதிகள் (Temporary Hand wash Basin) ஏற்படுத்திடும் பணி. | 0.30 |
| | 10 | சீர்காழி நகராட்சியில் COVID-19 சமூக இடைவெளி கடைபிடிக்க காவல் துறை மூலம் விழிப்புணர்வு செய்திட ஒலி பெருகி அமைத்துதரும் பணி. | 0.75 |
| | 11 | சீர்காழி நகராட்சியில் COVID-19 தமிழ்நாடு நுகர்பொருள் வானிபக்கழக நியாய விலை கடைகளில் தடுப்பு அமைத்தல் மற்றும் சாமியானா பந்தல் அமைத்திடும் பணி. | 0.51 |
| | | **மொத்தம்** | **20.58** |

அலுவலக குறிப்பு –1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்படி தடுப்பு நடவடிக்கை பணிகள் அனைத்தும் சமுக தொற்று ஏற்படாமல் பொதுமக்களை பாதுகாக்க வேண்டிய அவசர அவசியத்தை கருதி பணி உத்தரவு வழங்கி பணி மேற்கொண்டதையும் , நிர்வாக ஆணையர், சென்னை அவர்கள் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் நாகப்பட்டினம் அவர்களால் ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்தும் மற்றும் நகராட்சி பொது நிதியிலும் செலவீனம் மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.

(ந.க. எண் : 1034/2019/இ1)

| | | |
|---|---|---|
| பொருள் எண்-8 | இந்நகராட்சியின் 2020 – 2021 ஆம் ஆண்டிற்கான அலுவலகத்தில் அ–1, காசாளர், கணினி அறை, எச்–1 மற்றும் இ–1 பிரிவுகளில் உள்ள பிரிண்டர் டோனர்களை ரீபில்லிங் செய்தவதற்கு உத்தேச செலவினம் ரூ.50,000/ ஐ அனுமதி வழங்கிடவும் நகராட்சி பொது நிதியில் பணி மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு : 1. மன்றம் அனுமதிக்கலாம். | நகர்மன்ற தீர்மான எண்– 485 நாள்.29.05.2020 அனுமதிக்கப்படுகிறது. |

| | | |
|---|---|---|
| | (ந.க.எண்-2743/2018/இ1) | |
| பொருள் எண்-9 | இந்நகராட்சியின் 2019–20 ஆம் ஆண்டிற்கான அலுவலகத்தில் உள்ள கணினி, பிரிண்டர் மற்றும் இதர ஸ்கேனர் பழுதடைந்ததை பழுது நீக்குவதற்கு செய்தவதற்கு உத்தேச செலவினம் ரூ.1,00,000/ ஐ அனுமதி வழங்கிடவும் நகராட்சி பொது நிதியில் பணி மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு : 1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்-1460/2020/இ1) | நகர்மன்ற தீர்மான எண்– 486 நாள்.29.05.2020 அனுமதிக்கப்படுகிறது. |
| பொருள் எண்-10 | சீர்காழி நகராட்சியில் அலுவலக பயன்பாட்டிற்கு நகல் எடுக்கும் ஜெராக்ஸ் (Xerox) இயந்திரம் வாங்கப்பட்டு 8 ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டது அடிக்கடி பழுதடைந்ததால் பல முறை பழுதுநீக்கம் செய்தும் தற்போது இயங்காத நிலையில் உள்ளது எனவே அலுவலக பயன்பாட்டிற்கு தேவையான சொத்துவரி கேட்பு, குடிநீர் கட்டண கேட்பு , தொழில்வரி கேட்பு மற்றும் இதர பணிகளுக்கான நகல்கள் எடுப்பதற்கு வசதி இல்லாததால் புதியதாக ஒரு நகல் எடுக்கும் ஜெராக்ஸ் (Xerox) இயந்திரம் வாங்கிட உதவி திட்ட கணினி அலுவலர் அவர்களின் குறிப்பின் படியும் ஆணையர் அவர்களின் அறிவுரையின்படியும் புதியதாக ஜெராக்ஸ் (Xerox) இயந்திரம் கொள்முதல் செய்திட ஆகும் உத்தேச செலவினம் ரூ.1.50 இலட்சத்தை நகராட்சி பொது நிதியில் செலவினம் மேற்கொள்ளவும் விலைப்புள்ளிகள் பெற்று பணி மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு: 1) மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>(ந.க.எண்-1461/2020/இ1) | நகர்மன்ற தீர்மான எண்– 487 நாள்.29.05.2020 அனுமதிக்கப்படுகிறது. |
| பொருள் எண்-11 | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் சித்தமல்லி தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து பெறப்பட்டு நகராட்சி அலுவலகத்திலுள்ள 12.00 இலட்சம் லிட்டர் மற்றும் வ.உ.சி நகரில் உள்ள 2.00 இலட்சம் மேல்நிலை தொட்டி மூலம் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும் கோவில்பத்து, பனமங்கலம் மற்றும் துறையூர் ஆகிய பகுதிகளில் அமைந்துள்ள 30000 லிட்டர் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் மூலம் அப்பகுதி பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி மின் மோட்டார்களை இயக்கவும் அப்பகுதியில் உள்ள குளோரினேஷன்பிளாண்டினை இயக்கவும் இந்நகராட்சியில் போதுமான பணியாளர்கள் இல்லாததாலும், மேலும் குடிநீர் திட்ட பணியாளர் ஒருவர் வயது மூப்பு காரணமாக ஒய்வு பெற்றதாலும் மேட்டார் இயக்குவதில் சிரமம் எற்பட்டுள்ளது நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் வழிகாட்டி | நகர்மன்ற தீர்மான எண்– 488 நாள்.29.05.2020 அனுமதிக்கப்படுகிறது. |

| | | |
|---|---|---|
| | நெறிமுறையில் ஒப்பந்த அடிப்படையில் Out Source முறையில் பணியாளர்களை அமர்த்தி மேற்கொள்ள Lr,No.539/2005/F.3 நாள்–28.1.2005–ல் அனுமதிக்கப்பட்டுள்ளதன்படி 2018–19 பொதுப்பணித் துறை விலை விகிதத்தில் ஒரு நபருக்கு நாள் ஒன்றுக்கு ரூ.537.00 வீதம் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. 01.04.2020 உடன் ஒப்பந்த காலம் முடிவடைந்ததால் மேலும் 06.05.2020 முதல் 31.07.2020 வரை 3 மாதங்களுக்கு கால நீட்டிப்பு செய்து தற்போது உள்ள 2018–19 பொதுப்பணித் துறை விலை விகிதத்தில் ஒரு நபருக்கு நாள் ஒன்றுக்கு ரூ.537.00 வீதம் நான்கு நபர்கள் கொண்டு பணி மேற்கொள்ள ஆகும் செலவினம் ரூ. 1,97,616/– ஐ இந்நகராட்சியின் குடிநீர் திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு : 1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கிட மன்றம் ஏற்கலாம்.<br>(ந.க.எண்–568/2019/இ1) | |
| பொருள் எண்-12 | சீர்காழி நகராட்சியின் திட்ட பணிகளை Online e-tender முறையில் தமிழக அரசின் இணையதளத்தில் ஏற்றம் செய்திட மற்றும் பதிவிறக்கம் செய்திட நகராட்சி ஆணையர் அவர்களுக்கு Digital Signature Card தேவைப்படுவதால் அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.5,000/ ஐ நகராட்சி பொது நிதியில் வாங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு : 1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்-1461/2020/இ1) | நகர்மன்ற தீர்மான எண்–489 நாள்.29.05.2020 அனுமதிக்கப்படுகிறது. |

(ஒம்) முன்னிலை. திருமதி.P.தமிழ்ச்செல்வி.B.A.,
தனி அலுவலர் மற்றும் ஆணையர்,
சீர்காழி நகராட்சி.

இடம்–சீர்காழி
நாள்–29.05.2020

/உண்மை நகல்/

ஆணையர்,
சீர்காழி ந கராட்சி.